1995 ஏப்ரல் 3]

நிதியுதவி கொடுக்க வாரியம் ஏற்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

186—

திருவாரூர் ஒன்றியத்தில் பாலத்தை அகலப்படுத்த நடவடிக்கை

* **20002**—திரு வே. தம்புசாமி:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் ஒன்றியம், சேமங்களத்தையும், காக்கழனியையும் இணைக்கும் பாலம் குறுகலாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலத்தை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். **கண்ணப்பன்,** பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

197—

பெரிய நெகமம் வாரச் சந்தையைப் பொது ஏலத்தில் விடுதல்

* **10156**—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, பெரிய நெகமம் வாரச் சந்தையை பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கும் வகையில் தனியார் பொறுப்பிலிருந்து விடுவித்து பொது ஏலத்தில் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்புதல்

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த அறிவிப்புக்கு நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். அதுபற்றிப் பேசுவதாக இருந்தால் இங்கே பேரவையில் பேச முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) அசாதாரணமான சூழ்நிலை என்பது, இங்கே பேசக்கூடிய விஷயங்களைத்தான் நான் அனுமதிக்க முடியும். (குறுக்கீடு) இங்கே பேரவையில் வைக்கப்பட்ட விவாதங்கள், பேரவையில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் இவற்றைத்தான் இங்கே பேச முடியும். வேறு ஒரு ஃபோரத்தில் பேசக் கூடிய பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) பேரவைக்குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினையை இங்கே பேச முடியாது. இன்னொரு ஃபோரத்தில் பேசப்பட வேண்டிய பிரச்சினையை இங்கே பேச முடியாது. (குறுக்கீடு) This is not proper forum for that discussion. அதனால்தான் உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) It has to be discussed in another forum. (குறுக்கீடு) அது பிரச்சினை இல்லை. ஃபோரமே இது அல்ல. (குறுக்கீடு) ஃபோரமே இது இல்லை என்கிறபோது அதற்கு நான் அனுமதி மறுத்து